பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
09 02 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தில்லியில் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வேவ்ஸ் உச்சிமாநாடு இந்தியாவை படைப்பாற்றலுக்கான உலகளாவிய மையமாக மாற்றும் என தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. கடந்த 3 ஆண்டுகளில் தமிழகம் இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாகி இருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழக மீனவர்கள் 14 பேர் எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5. இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி கட்டாக்கில் இன்று நடைபெறுகிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

தில்லியில் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி 48 இடங்களில் வெற்றி பெற்று சுமார் 27 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இதையொட்டி தில்லி பிஜேபி தலைமையகத்தில் நடைபெற்ற வெற்றிக் கொண்டாட்டத்தில் பேசிய பிரதமர், நல்லாட்சியும், வளர்ச்சியும்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல்திட்டமாக உள்ளது என்றார்.

21ஆம் நூற்றாண்டில் பிறந்த இளைஞர்கள் தில்லியில் பிஜேபியின் நல்லாட்சியை முதன் முறையாக காண இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தில்லி தேர்தல் முடிவு பிஜேபியின் இரட்டை எஞ்சின் ஆட்சி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

இத்தேர்தலில் பிஜேபியின் கேடயமாக பெண் வாக்காளர்கள் திகழ்ந்ததாக குறிப்பிட்ட பிரதமர், பெண்களின் முன்னேற்றத்திற்காக அளித்த வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தார்.

<<<<>>>>

இளைஞர்கள் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை தவறாமல் பின்பற்ற வேண்டும் என மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் உலக புத்தகத் திருவிழாவை ஒட்டி நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் பேசிய அவர், புத்தகங்கள் படிப்பது மனதிற்கு வலிமையும், ஊக்கமமும் அளிக்கும் என்றார்.

மேலும் புத்தகங்கள் உண்மையான வழிகாட்டியாக திகழ்வதோடு அறிவாற்றலின் நிரந்தர ஆவணமாக இருப்பதுடன் பல்வேறு சிந்தனைகள் மற்றும் வருங்கால தலைமுறையினருக்கான பாரம்பரியங்களை பேணிப் பாதுகாப்பதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சவாலான தருணங்களில் ஞானத்தையும், வழிகாட்டுதலையும் வழங்கும் நூல்கள் வாழ்நாள் முழுவதும் நமக்கு துணையாக இருக்கும் என்றும் திரு. ஓம்பிர்லா தெரிவித்தார்.

<<<<>>>>

வேவ்ஸ் உச்சிமாநாடு இந்தியாவை படைப்பாற்றலுக்கான உலகளாவிய மையமாக மாற்றும் என தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் உலகின் படைப்பாற்றல் அதிகார மையமாக இந்தியாவை மாற்றுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மும்பையில் நடைபெறும் இந்த மாநாடு உலகின் முன்னணி ஊடக நிறுவனங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள படைப்பாற்றல் திறனாளிகளை ஒருங்கிணைக்கும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மருந்து தயாரிப்பு தொழில்துறையினர் தரம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில் இந்திய மருந்து தயாரிப்பாளர் சங்க ஆண்டு விழாவில் பேசிய அவர், நாட்டின் மருத்துவவத்துறை வளர்ச்சியில் இந்த அமைப்பினரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்றார்.

நாட்டில் உள்ள சிறிய மற்றும் பெரிய மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் போலி மருந்து தயாரிக்கும் நிறுவனங்களை அடையாளம் காண இந்த சங்கத்தின் உறுப்பினராக உள்ள தொழில் நிறுவனங்கள் உதவ வேண்டும் எனவும் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.

<<<<>>>>

இஸ்ரோ நிறுவனத்தில் பொறியியல் பணிகளுக்கான தேர்வு வரும் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளதாக அதன் துணை இயக்குநர் திரு. கிரக துரை தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் தனியார் கல்லூரி நிகழ்ச்சியில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எலக்ட்ரிகல், மெக்கானிக்கல் மற்றும் கணினி பொறியியல் பட்டதாரிகள் இதில் பங்கேற்கலாம் என்றார்.

இதுதவிர பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் இயற்பியல் பட்டதாரிகள் சயின்டிஃபிக் அசிஸ்டெண்ட் பணிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

இந்தப் பணிகளுக்கு எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தப்பட்டு பணி நியமனம் வழங்கப்படும் என்றும் திரு. கிரக துரை தெரிவித்தார்.

<<<<>>>>

கடந்த 3 ஆண்டுகளில் தமிழகம் இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாகி இருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், அனைத்துத் துறைகளிலும் தமிழகம் அதிக வளர்ச்சியடைந்திருப்பதை மத்திய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுவதாக கூறினார்.

நாட்டின் மிகப்பெரிய பொருளாதார மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருப்பதாக குறிப்பிட்ட முதலமைச்சர், வறுமை மற்றும் பட்டினிச்சாவுகள் இல்லாத மாநிலமாக தமிழகம் உள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும் பெண்களுக்கான மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண், இலவச பேருந்துப் பயணம் போன்ற திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஈரோடு இடைத்தேர்தலில் களத்தில் யாரும் இல்லாத நிலையில் திமுக பெற்ற வெற்றி போலியானது என அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசின் திறமையின்மையால் மாநிலத்தில் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளது என்றார்.

திருப்பரங்குன்றனம் விவகாரத்தில் பொதுமக்களிடையே சுமூக நிலையை ஏற்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாகவும் அவர் கூறினார்.

கிராமங்களை நகராட்சிகளுடன் இணைக்கும்போது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயல்பட வேண்டும் எனவும் திரு. எடப்பாடி பழனிசாமி மாநில அரசை வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழக மீனவர்கள் 14 பேர் எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த இந்த மீனவர்கள், வடக்கு மன்னார் கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினர் அவர்களை சுற்றிவளைத்து கைது செய்தனர்.

மீனவர்களின் 2 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் மீனவர்கள் அனைவரும் இரனைத்தீவு கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

காங்கோவில் உடனடியாக சண்டைநிறுத்தம் மேற்கொண்டு அமைதிப் பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும் என கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

<<<<>>>>

சிரியாவில் உள்ள Deir Ali நகரில் ஹமாஸ் அமைப்பினரின் ஆயுதக் கிடங்கு மீது இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களை புனரமைக்க 101 கோடி ரூபாய் ஒதுக்க அம்மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

<<<<>>>>

ஜம்மு பகுதியில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட இருவரை அம்மாநில காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்துள்ளனர்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் முதலமைச்சரின் Sahbhagita திட்டத்தின்கீழ் பசுமாடுகள் பராமரிப்பிற்கான தினசரி படியை 30 ரூபாயில் இருந்து 50 ரூபாயாக உயர்த்தி அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் பழனியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களுக்கான புதிய கட்டுப்பாட்டு அறையை மாநில அமைச்சர் திரு. சக்கரபாணி திறந்து வைத்தார்.

<<<<>>>>

பெரம்பலூர் மாவட்டம் லெப்பைக்குடிகாடு பேரூராட்சிக்கு உட்பட்ட ஜமாலியா நகர்ப்பகுதியில் 100 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சிவசங்கர் வழங்கினார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி மகாவித்யாலயா பல்கலைக்கழகத்தின் 28வது பட்டமளிப்பு விழாவில் அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கவுன்சிலின் தலைவர் திரு. சீதாராமன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

<<<<>>>>

பனை தொழிலாளர்கள் வாரிய ஆலோசனைக் கூட்டம் திண்டுக்கல்லில் அந்த வாரியத்தின் தலைவர் திரு. எர்ணாவூர் நாராயணன் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் பழங்குடியினருக்கான ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளியின் அறிவியல் ஆசிரியர் இளையகண்ணு போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றம் சார்பில் நுண்ணிய பிளாஸ்டிக்குகள் மற்றும் மனித ஆரோக்கியம் என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கட்டாக்கில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 1-0 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

<<<<>>>>

துனிஷீயாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manas Dhamne இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர் 6-4, 6-3 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் Alberto-வை வென்றார்.

<<<<>>>>

அர்ஜென்டினாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் சென்னை அணி 3-0 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் அணி, 3-1 என்ற கோல் கணக்கில் முகமதன் அணியை வென்றது.

இன்று நடைபெறும் போட்டியில் பெங்களூரு அணி - ஜம்ஷெட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்கும்.

<<<<>>>>

இந்திய கைத்தறி தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் சேலம் அணி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

சேலத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கிரிக்கெட், டேபிள் டென்னிஸ், செஸ், த்ரோபால், கோகோ உள்ளிட்ட பிரிவுகளில் வெற்றி பெற்ற சேலம் கைத்தறி தொழில்நுட்பக் கழக அணியினருக்கு மாநகராட்சி ஆணையர் திரு. ரஞ்சித் சிங் பரிசுகளை வழங்கினார்.

<<<<>>>>